கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்
www.newwisdomministries.com
08.05.2022
ஞானம் 5 – ஒலி 19



# தீய எண்ணங்களுக்குத் தீனி நம்மை அழிக்கும் தீ

# எண்ணங்களால் உயிர்ப்போம்




அருட்பணி.சைமன் பீட்டர்

அன்பிற்கினியவர்களே வணக்கம்.

ஞான ஒலி மின்னிதழில் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். உங்கள் வாழ்வு நிறைவானதாகவும் நலமானதாகவும் அமைய இறைமகன் இயேசுவின் அருள் உங்களுள் பெருகட்டும்.

**தீதும் நன்றும் பிறர் தர வாரா**

என்ற பொன்மொழி மாபெரும் உண்மையை நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

ஒருவரின் வாழ்வு அவரவரின் பொறுப்பாகும். எதுவானாலும் இருக்கலாம் அது அவரவரின் சிந்தனை சொல் செயல் ஆகியவற்றைப் பொறுத்தே அமையும்.

தன் உருவாக்கமும் இந்த சமூக, உலக உருவாக்கமும் ஒன்றோடு ஒன்றைச் சார்ந்தது.

**அகம் எப்படியோ புறமும் அப்படியே**

உலகம் மிகவும் கெட்டுப் போச்சு என்று யாரும் குறை சொல்லவே முடியாது.

நான் யாருக்கும் எந்த தீங்கும் செய்ததில்லை ஆனால் எனக்கு ஏன் இவ்வளவு துயரம் பிரச்சனைகள் என்று பலர் சொல்வதை கேட்டிருக்கிறோம். இவ்வாறு அவர்கள் பார்ப்பவர்களிடம் எல்லாம் திரும்பத் திரும்ப சொல்லும்போது அவர்களுக்கு மேலும் மேலும் துன்பங்களே வந்துசேரும். அவர்களது துயரங்களுக்கு அவர்களே காரணம் என்பதை அவர்கள் அறிவதில்லை. இதைத்தான் இயேசு கல்வாரியில் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள் என்று சொன்னார். இப்படிப்பட்டவர்கள் யாருக்கும் எந்த தீங்கும் செய்யாது இருந்திருக்கலாம், இருக்கலாம், ஆனால் அவர்களின் எண்ணங்களில் சதாகாலமும் தங்களுக்கு நேர்ந்த துயரங்களை நினைத்துக் கொண்டே இருப்பதாலும் இனி என்னென்ன துன்பங்கள் வருமோ? என்று நினைக்கும் போதே அவை சூழ்கொள்ள ஆரம்பித்துவிடும். அவர்கள் விரும்பிய வண்ணமே அனைத்தும் தவறாது அவர்களுக்கு வந்து சேரும். நாம் யாருக்கும் தீங்கு செய்யாது இருக்கலாம் அதற்கான துணிச்சல் இல்லாமல் இருக்கலாம் ஆனால் பிறருக்கு தீங்கு நடக்க வேண்டும் என்று நினைத்து அவர்களுக்கு இப்படி அப்படி வேதனை வரவேண்டும் என்று எண்ணலாம்.

நமது கோழைத்தனம் பிறரைப் பழி வாங்கத் தூண்டும் மனதுக்குள்ளேயே பழி தீர்த்துக் கொள்வோம். அவர்களையே திட்டிக் கொண்டு, அவர்களது வீழ்ச்சியை எதிர்பார்த்து கொண்டிருப்போம். கடவுள் அவர்களைப் பார்த்துக் கொள்வார். கடவுளே, மாதாவே, அவர்களுக்கு தக்க தண்டனை கொடு என்று எண்ணிக் கொண்டே இருப்போம். இந்த எண்ணங்களை போதும் நம்மை வீழ்த்த.

**அதனால்தான் உங்கள் பகைவரை வெறுக்காதீர்கள். அவர்களுக்காகச் ஜெபியுங்கள்.**

உங்களைத் தூற்றுவோருக்கு ஆசி கூறுங்கள். ஒரு கன்னத்தில் அறை மறு கன்னத்தையும் காட்டுங்கள். பழிக்குப் பழி வாங்காதீர்கள் என்று இயேசு கூறுகிறார். பிறருக்கு தீங்கு நினைத்தால் , தீங்கு நம்மை வந்து சேரும். பிறருக்குத் தீங்கு செய்யாவிட்டாலும் நம்முடைய தீய எண்ணங்கள் நமக்கு தீமைகளைகொண்டு வந்துசேர்க்கும்.

**நம் செயல்களை விட நம் எண்ணங்களே மிக மிக ஆபத்தானவை.**

தீய எண்ணங்கள் நமக்குள் வருவதை தடுக்க முடியாது ஆனால் அதை உடனே நம்மிடமிருந்து அகற்ற நம்மால் முடியும். அந்த தீய எண்ணங்கள் நம்முடைய மனதில் கூடுகட்டி பலுகிப் பெருக விடக் கூடாது. இது எல்லாம் நம்முடைய பொறுப்பு அதற்காகத்தான் ஜெபம், தியானம், ஒப்புரவு அருட்சாதனம், மன்னிப்பு, சமாதானம், புரிந்துகொள்ளும்தன்மை, போன்ற மதிப்பீடுகளை நமக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள். நமது விருப்பமும், தேர்வும், இத்தகைய மதிப்பீடுகளாய் இருந்தால், நம்முடைய வாழ்வு மேன்மையடையும். பிறகு நம்மிடம் உள்ள தீங்கும் துயரமும் தானாகவே அகன்று விடும். நலமான வாழ்வு நம்முள் மலரும். நம்முடைய எண்ணங்களே நம்முடைய உயிர்ப்புக்கு அடித்தளம்

படிக்க..

1கொரிந்தியர் 13:1-13

பிலிப்பியர் 4:4-8



# விவிலியம் அறிவோம் - 37

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யாக்கோபின் புதல்வர்கள்


யாக்கோபின் புதல்வர்களைப் பற்றிய அறிவு முக்கியமானது ஏனெனில் இஸ்ரயேல் என்ற மக்களினத்தின் குலத் தந்தையர்களாக யாக்கோபின் புதல்வர்கள் வருகின்றனர். யாக்கோபு தனது தாய்மாமனின் மகள்களான லேயாவையும் ராகேலையும் திருமணம் செய்கின்றார். இரண்டு பெண்களும் பல பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும் எனப் போட்டியிடுகின்றனர். ஆனால் தொடக்க நிலையில் லேயா பல பிள்ளைகளுக்குத் தாயாகின்றார்; ராகேல் பிள்ளை பெற முடியாதவராக இருக்கின்றார். யாக்கோபு ராகேலை விரும்பினார்; லேயா அவரது முதல் மனைவியாக இருந்தாலும் அவளுக்கு முக்கியத்துவம் தரவில்லை; அவளை வெறுத்து ஒதுக்குகின்றார். யாக்கோபு லேயாவை வெறுத்து ஒதுக்குவதற்கு அவர் ராகேலை அதிகமாக அன்புசெய்வது ஒரு காரணம்; இன்னொரு காரணம் அவள் பார்ப்பதற்கு அழகானவளாக இல்லை என்பது. ஆனால் கடவுள் லேயா மீது இரக்கம் காட்டுகின்றார்.

லேயா வெறுப்புக்குள்ளானதை ஆண்டவர்கண்டுஅவருக்குத் தாய்மைப்பேறு அருளினார் என வாசிக்கிறோம். அவள் தொடர்ந்து நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகின்றாள். முதல் மகனைப் பெற்றெடுத்தபோது, ஆண்டவர் என் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இப்பொழுது என் கணவர் என்மீது அன்புகூர்வார் என்பது உறுதி எனக்கூறி ரூபன் என்று பெயரிடுகின்றார். நான் வெறுப்புக் குள்ளானேன் என்பதை ஆண்டவர் கேட்டு, இவனையும் எனக்குத் தந்தருளினார் என்றுசொல்லி, இரண்டாவது மகனுக்குச் சிமியோன் எனப் பெயரிடுகின்றார். இப்பொழுது என் கணவர் என்னோடு இணைந்திருப்பார் என்பது உறுதி. ஏனெனில் நான் அவருக்கு மூன்று புதல்வரைப் பெற்றெடுத்துள்ளேன் என்று கூறி மூன்றாவது மகனுக்கு லேவி எனப் பெயரிடுகின்றார். அவர் மீண்டும் கருத்தரித்து மகனைப் பெற்றெடுத்தபோது இப்போது ஆண்டவரை நான் மாட்சிபடுத்துவேன் என்று சொல்லி அவனுக்கு யூதா என்று பெயரிடுகின்றார். லேயா தனது மகன்களுக்குக் கொடுக்கும் பெயர்கள், அவள் யாக்கோபுக்கு பலமகன்களைப் பெற்றெடுத்தாலும், அன்பு செய்யப்படாத, விரும்பப்படாத மனைவியாகவே இருந்தார் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளன.

ஒருபக்கத்தில் லேயா நான்கு குழந்தைகளுக்கு தாயானாலும் தனது கணவனின் அன்பை முழுமையாகப் பெறமுடியாதவளாக இருக்கின்றாள். மறு பக்கத்தில் ராகேல் யாக்கோபின் அன்புக் குரியவளாக இருந்தாலும் பிள்ளைபெற முடியாதவளாக இருக்கின்றாள். ராகேலின் பிள்ளைபெற முடியாதநிலை அவளை மிகவும் துன்புறுத்துகிறது. தனது சகோதரியான லேயாவின் மீது அவர் பொறாமைகொள்கின்றார். தனக்கும் பிள்ளைகள் பிறக்கவேண்டும் என அவர் விரும்புகின்றார். எனவேதான் அவர் யாக்கோபிடம், நீர் எனக்குப் பிள்ளைகளைத் தாரும். இல்லையேல் செத்துப் போவேன் எனக் கூறுகின்றார். ராகேலின் மனநிலை புரிந்து கொள்ளக் கூடியதுதான். ஆனால் யாக்கோபு அவர் மீது சினம் கொள்கின்றார். நான் என்ன கடவுளா? அவரல்லவா உனக்குத் தாய்மைப் பேறுதராதிருக்கிறார் எனக் கூறுகின்றார். தாய்மைப்பேறு கடவுளின் கொடை என்ற கருத்து அவர்கள் நடுவில் இருந்தது என்பதற்கு

ஆதாரமாக இச்சொற்றொடர் உள்ளது. ராகேல் கணவனின் அன்பைப் பெறுவதுமட்டும் போதுமானதாக இல்லை; அவள் கடவுளின் கருணையையும் பெறவேண்டும். ராகேல் எப்படியாவது தனக்கு பிள்ளைவேண்டும் என நினைக்கின்றார். எனவே தனது பணிப்பெண் பில்காவை யாக்கோபுக்கு மனைவியாகத் தர முன் வருகின்றார். இதோஎன் பணிப்பெண் பில்கா. நீர் அவளோடு கூடி வாழ்வீர். அவள் எனக்காக பிள்ளை பெற்று என் மடியில் வைக்க, நானும் அவள் மூலம் பிள்ளைப் பேறுபெறுவேன் (தொநூ 30:3) என்கின்றார். பிள்ளைபெற முடியாத மனைவி பணிப்பெண் மூலம் பிள்ளைப் பெற்றுக்கொள்வது மேற்காசிய நாடுகளில் வழக்கமாக இருந்தது. ஆபிரகாமின் மனைவி சாரா பிள்ளைபெற முடியாதவராக இருந்த நிலையில் அவருடைய பணிப் பெண் ஆகார் என்பவரை ஆபிரகாமுக்கு மனைவியாகக் கொடுத்து அவர் மூலம் பிள்ளைபெற்றுக் கொள்வதை நாம் ஏற்கனவே பார்த்தோம்.

ராகேலின் பணிபெண் பில்கா மூலமாக யாக்கோபுக்கு இரண்டு பிள்ளைகள் பிறக்கின்றனர். முதல் குழந்தை பிறந்தபோது ராகேல், ஆண்டவர் எனக்கு நீதி வழங்கி,என் மன்றாட்டைக் கேட்டருளி, எனக்கு ஒரு மகனைத் தந்தார் என்று சொல்லி அவனுக்குத் தாண் என்னும் பெயரிட்டார் (தொநூ 30:6) என வாசிக்கிறோம். பில்கா இரண்டாவது மகனைப் பெற்றெடுத்த போது நான் என் சகோதரியோடு கடுமையான போராட்டங்களில் ஈடுபட்டு வெற்றி கொண்டேன் எனறு கூறி அவனுக்கு நப்தலி எனப் பெயரிடுகின்றார். ராகேல் தனது பணிப் பெண்ணான பில்கா வழியாக இரண்டு குழந்தைகளைப் பெற்றதைக் கண்டலேயா பொறாமைப்படுகின்றார். தனக்குக் குழந்தைப்






பேறு நின்றுவிட்டதால் தன்னுடைய கணவனின் அன்பைப் பெற முடியவில்லை எனக் கருதுகின்றார். எனவே அவளும் தனது பணிப் பெண்ணான சில்பாவை தனது கணவனுக்கு மனைவியாக அளிக்கின்றார். அவள் மூலமாக இன்னும் அதிகமாக குழந்தைகளைப் பெற விரும்புகின்றார். சில்பா மூலமாக யாக்கோபுக்கு இரண்டு மகன்கள் பிறக்கின்றனர். சில்பா முதல் குழந்தையைப் பெற்றெடுத்ததும்,லேயா மகிழ்ச்சியடைந்து நான் நற்பேறு பெற்றுள்ளேன் என்று சொல்லி குழந்தைக்கு காத்து எனப் பெயரிடுகின்றார். சில்பா இரண்டாவது குழந்தையைப் பெற்றெடுத்த போது லேயா எனக்கு எவ்வழவு மகிழ்ச்சி! பெண்டிர் என்னைமகிழ்ச்சி பெற்றவள் என்பர் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் எனப் பெயரிடுகின்றார். குழந்தைகளுக்காக போட்டியிடும் இரண்டு சகோதரிகளும் நல்மனத்துடன் உறவுகொண்டவர்களாக வாழவில்லை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. கணவனின் அன்பைப் பெறுவதற்காகப் போட்டியிடுகின்றனர். அவர்கள் நடுவில் நிலவுகின்ற பொறாமை மற்றும் வன்மம் நிறைந்த உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அடுத்து வரும் தூதாயீம் கனிகள் பற்றிய நிகழ்வு உள்ளது.

கோதுமை அறுவடைக் காலத்தில் வயல்வெளியில் கண்ட தூதாயீம் கனிகளை லேயாவின் தலைமகனான ரூபன் தன் தாயிடம் கொண்டுவந்து கொடுக்கின்றான். இதைப் பார்த்த ராகேல் லேயாவிடம் உன் மகன் கொண்டுவந்த தூதாயீம் கனிகளில் எனக்கும் கொஞ்சம் கொடு எனக் கேட்கின்றார். ராகேலுக்குலேயா கூறும் பதில் பல உண்மைகளை நமக்கு வெளிப்படுத்துகின்றன. என் கணவனை நீ பறித்துக் கொண்டது போதாதா? என் மகன் கொண்டு வந்த கனிகளையும் பறித்துக் கொள்வாயோ? எனக் கேட்கின்றார். இந்தப் பதில் அவர்களுக்குள் ஒரு சுமூகமான உறவு இல்லை என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

யாக்கோபு ராகேலின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்; அவர் லேயாவை நெருங்குவதை ராகேல் அனுமதிக்கவில்லை எனத் தெரிகிறது. எனவே தான் ராகேல், சரி, உன் மகன் கொண்டு வந்த தூதாயிம் கனிகளுக்குப் பதிலாக அவர் இன்றிரவு உன்னோடு கூடியிருக்கட்டும் எனக் குறிப்பிடுகின்றார். தூதாயீம் கனிகள் மருத்துவக் குணம் கொண்டவை; தம்பதிகள் உடலுறவு கொள்வதற்கான உணர்ச்சியைத் தூண்டி யெழுப்பும் சக்தி வாய்ந்தவை என கருதப்பட்டவை. லேயா தண் கணவனுடன் கூடுவதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றார். சில தூதாயீம் கனிகளை ராகேலுக்குக் கொடுத்துக் கணவனோடு கூடுகின்ற வாய்ப்பைப் பெறுகின்றார். மாலை வேளையில் யாக்கோபு வயல் வெளியினின்று திரும்பி வரும்போதே, லேயா அவருக்கு எதிர் கொண்டுபோய், நீர் என்னோடு கூடியிருக்க வேண்டும். ஏனெனில், என் மகன் கொண்டுவந்த தூதாயிம் கனிகளை ஈடாகக் கொடுத்து நான் உம்மை வாங்கிக் கொண்டேன் என்றார். அவர் அன்றிரவு அவரோடு கூடியிருந்தார் என ஆசிரியர் பதிவுசெய்கிறார். யாக்கோபு தனது இரு மனைவியரையும் பெறுவதற்காக பதினான்கு ஆண்டுகள் லாபானுக்கு ஊழியம் செய்தார். இப்போது லேயாதனது சகோதரியான ராகேலுக்குக்கு கொடுத்த தூதாயீம் கனிகளுக்காக லேயாவுக்கு ஊழியராகின்றார்.

லேயா மீண்டும் மூன்று பிள்ளைகளை யாக்கோபுக்குப் பெற்றுத் தருகின்றார். லேயா ஐந்தாவது மகனைப் பெற்றெடுத்தபோது நான் என் பணிப்பெண்ணை என் கணவருக்குக் கொடுத்ததற்காகக் கடவுள் எனக்கு ஈடுசெய்துள்ளார் என்று சொல்லி அவனுக்கு இசக்கார் எனப் பெயரிடுகின்றார். ஆறாவதாக இன்னொருமகனைக் கருத்தரித்துப் பெற்றெடுத்தபோது, கடவுள் எனக்கு ஒரு சிறந்தகொடை கொடுத்துள்ளார். இனிமேல் என் கணவர் என்னைப் பெருமையாக நடத்துவார். ஏனெனில், நான் அவருக்கு ஆறு புதல்வரைப் பெற்றிருக்கிறேன என்று கூறி அவனுக்குச்

செபுலோன் எனப் பெயரிடுகின்றார். அதன்பின் ஏழாவது குழந்தையாக ஒரு பெண்மகவைப் பெற்று, அவளுக்கு தீனா எனப் பெயரிட்டு அழைக்கின்றார். இதுவரையாக்கோபுக்கு பத்து புதல்வர்கள் பிறந்துவிட்டனர். லேயா மூலமாக ஆறு புதல்வர்களும், பில்கா மூலமாக இரண்டு புதல்வர்களும், சில்பா மூலமாக இரண்டு புதல்வர்களும் பிறந்துள்ளனர். ராகேலுக்கு இதுவரை எந்த குழந்தையும் பிறக்கவில்லை. ராகேல் தொடர்ந்து கடவுளை வேண்டுகிறார். அவருடைய வேண்டுதலுக்குச் செவிசாய்த்து கடவுள் ராகேலை நினைவுகூர்கிறார். அவள் முதல்முறையாகக் கருத்தரித்து ஒருமகனைப் பெற்றெடுக்கின்றார். கடவுள் என் இழிவைப் போக்கினார் என்றும் மேலும் ஆண்டவர்




இன்னொரு மகனையும் எனக்குச் சேர்த்துத் தருவாராக என்று கூறி அவனுக்கு யோசேப்பு எனப் பெயரிடுகின்றார். ராகேலுக்கு பென்யமின் என்று பெயரிடப்பட்ட இன்னொரு மகன் பிறப்பான். ஆனால் அவனுடைய பிறப்புகானான் நாட்டிற்குச் சென்றபின் நடக்கும். இவ்வாறு யாக்கோபுக்கு பன்னிரு புதல்வர்கள் பிறக்கின்றனர். இந்தப் பன்னிருபுதல்வர்களும் பிற்காலத்தில் இஸ்ரயேல் மக்களினத்தின் பன்னிருகுலத்தலைவர்களாகக் கருதப் படுகின்றனர்.


அன்பானவர்களே, இக்கதையில் வருகின்ற பெண்கள் வழியாக நம் வாழ்வுக்கான செய்திகள் பலவற்றைக் கற்றுக்கொள்ளலாம். முதலாவதாக, கடவுள் எளியவர்கள் மீது கருணை காட்டுகிறார் என்பதைலேயா, ராகேல் கதையில் பார்க்க முடிகிறது. மனிதர்களால் குறைவாக மதிப்பிடப்படுபவர்கள் கடவுள் பார்வையில் மதிப்புள்ளவர்களாகத் தெரிகிறார்கள். இக்கதையில் வருகின்றலேயா அதிகமாக அன்பு செய்யப்படாதவர்; பிறரைக் கவரக்கூடிய அழகில்லாதவர்; தனது கணவனால் வெறுத்தொதுக்கப்பட்டவர். ஆனால் கடவுள் லேயாவை ஆசிர்வதிக்கிறார்; அவளுக்கு குழந்தைப்பேறு அளிக்கிறார். ஆனால் அழகான, உடல் கவர்ச்சி வாய்ந்த, அழகிய கண்களைக் கொண்ட, யாக்கோபினால் அதிகம் அன்பு செய்யப்பட்டராகேல் குழந்தைப்பேறு இல்லாதவளாக, மனக்கசப்புமிகுந்த பெண்ணாக இருக்கிறார். நீண்டகாலமாக கடவுள் அவளை நினைவு கூரவில்லை (தொநூ 29:31). ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் இரண்டு பெண்களுமே கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாக மாறுகின்றனர் எதிர்கால இஸ்ரயேல் நாடு உருவாக காரணர்களாக வருகின்றனர். இருவரிடமிருந்தும் எட்டு புதல்வர்கள் யாக்கோபுக்குப் பிறக்கின்றனர். லேயாவின் வயிற்றிலிருந்து ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார் மற்றும் செபுலோன் பிறக்கின்றனர். ராக்கேலின் வயிற்றிலிருந்து யோசேப்பும் பென்யமினும் பிறக்கின்றனர். எனவே இந்த இரண்டு அன்னையரும் தனிமனிதர்களின் அன்னையர் மட்டுமல்ல, மாறாக இனங்களின், நாட்டின் அன்னையராகமாறுகின்றனர்.

இன்னும் இக்கதையில் பில்கா, சில்பா என்ற இரண்டு பணிப்பெண்களையும் சந்திக்கிறோம். பில்காராக்கேலின் பணிப்பெண். சில்பாலேயாவின் பணிப்பெண். இவர்கள் இருவரும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக வருகின்றனர். ஒருவிதத்தில் அவர்கள் உண்மையான வாழ்வை இழந்தவர்கள். ஏனெனில் தனிப்பட்ட விதத்தில் சுதந்திரமாக அவர்களால் எதையும் செய்ய இயலாது. அனைத்திற்கும் அவர்கள் தங்கள் தலைவியரைச் சார்ந்து இருக்கவேண்டும். அவர்கள் கூறுவதையே செய்ய வேண்டும். அவர்கள் அடிமைகள் என்பதால் மட்டும் சமூகத்தால் ஒடுக்கப்படவில்லை மாறாக பெண்கள் என்பதாலும் ஒடுக்கப்பட்டவர்கள். எல்லாச் சூழ்நிலைகளிலும் தங்கள் தலைவியரின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் (தொநூ 30:3, 9). ஆனாலும் விவிலியவரலாற்றில் இந்த இரண்டு பணிப்பெண்களும் வாழ்வையும், ஆசியையும், நீதியையும், மகிழ்ச்சியையும் பெற்றுத்தருபவர்களாக வருகிறார்கள் (தொநூ 30:6, 13). பில்காதாணையும், நப்தலியையும் பெற்றெடுக்கின்றாள். சில்பாவோ காத்துவிற்கும், ஆசேருக்கும் அன்னை யாகின்றாள். இவ்வாறு ஒடுக்கப்பட்ட இந்தப் பணிப்பெண்களும் இஸ்ரயேல் என்றமக்களினம், நாடு உருவாகக் காரணராகின்றார்கள். கடவுளின் பார்வையில் அனைவரும் சமமே; அவரது அருள் அனைவரையும் அவரது கருவிகளாக்கும்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ் CMF**





# மறையுரை


அருட்பணி. சூ.ஸ்டீபன் கஸ்பார்
பங்குதந்தை
ஆரோக்கிய அன்னை ஆலயம்
குமரன் திருநகர் பங்கு, திண்டுக்கல் மறைமாவட்டம்.


## பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு
08-05-2022

**திப 13 : 14, 43-52 / தி.வெ. 7 : 9, 14-17 / யோவா. 10 : 27 - 30**

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே! கடந்த வாரம் பேதுருவின் இயேசு அனுபவத்தைப் பற்றிய செய்தியை உள்வாங்கினோம். நமக்கு அந்த அனுபவம் கிடைக்க, இயேசுவை சந்திக்க, நம் துன்பத்தின் மத்தியில் அவருடைய உடனிருப்பு வேண்டுமென்று மன்றாடக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தினோம். ஆம் இந்த இயேசுவை அன்புசெய்தால் நம் வாழ்விலும் அற்புதம் நடக்கும், நம்மை அற்புதத்தைக் காணச் செய்வார். நாமும் அற்புதங்கள் செய்வோம். அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில் இருக்கிறார். அற்புதங்கள் செய்கிறவர் என்றும் நமக்குள் வசிக்கிறார்.

இன்றைய வாரம் பா.கா. 4-ஆம் வாரச் செய்தி அந்த ஆண்டவர் இயேசு நமக்கு நல்லாயன் எனவே திரு அவை இந்த ஞாயிறை நல்லாயன் ஞாயிராகக் கொண்ட நமக்கு அழைப்புக் கொடுக்கிறது.

இன்றைய நற்செய்தியிலே இயேசு என் குரலுக்கு செவிமடுத்தால் நீங்கள் என் ஆடுகள் என்கிறார். நாம் அவருடைய ஆடுகளாக உண்மைச் சீடர்களாக வாழ விரும்பினால் நாம் அவருடைய குரலுக்குச் செவிமடுத்தல் அவசியமாகும். அவரின் அன்பிற்கு அடிபணிந்து அவர் மீது நம்பிக்கை வைப்போமென்றால் அவர் நமக்கு அருளுவது அழியா வாழ்வாகும்.

அழியா வாழ்வு என்பது என்பதற்கு இன்றைய 2ம் வாசகத்தில் நிலைவாழ்வு அங்கே இருப்பவர்களைத் தாக்காது தேவ ஆட்டுக்குட்டி அனைவரையும் வாழ்வு தரமு நீரூற்றிற்கு அழைத்துச் செல்லும். அனைவரின் கண்ணீரையும் கடவுள் துடைப்பார் என்று தி.வெ. 7:16, 17ல் வாசித்தோம்.

அவருக்கு நிலையற்ற வாழ்வின் மேலும் மரணத்தின் மீதும் அவருக்கு ஆற்றல் உண்டு. அவரே உயிருடன் மூன்றாம் நாள் எழுந்து தனககு மறுவாழ்வு அழியா வாழ்வை அளிக்கும ஆற்றலும் உண்டென உலகுக்கு காட்டினார். இதையே! உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் சாகார் என்று யோ. 11:25,26 இல் சொல்லுகிறார்.

அவர் தரும் அழியா வாழ்வை அடைய வேண்டுமென்றால் நல்லாயனாம் நம் ஆண்டவரை நம்புவோம். அவர் குரலுக்குச் செவிமடுப்போம். அவர்தரும் மீட்பினை நமதாக்கிட கடினமாய் முயற்சி எடுப்போம். முயற்சியின்றி முன்னேற்றமில்லை. உழைப்பின்றி உயர்வில்லை. ஆம், அந்த நல்லாயரை பின் தொடர்பவர்கள் தான் வாழ்வையும் மீட்பையும் பெற முடியும். நாமும் அதை பெற பாசத்தையும், நம்பிக்கையையும், விடாமுயற்சியையும் நம் கையிலெடுத்து அவரின் குரலுக்கு செவிகொடுத்து அவரைப் பின் செல்லுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில் பவுலும் பர்னபாவும் அந்தியோக்கியாவில் தொழுகை கூடத்தில் போதிக்கும் பொழுது பரிசேயர்களும், பெரியோர்களும் அவர்களுக்கு எதிராய் பேசி, அவர்களைத் துன்புறுத்தி நாங்கள் விடுதலையின் மக்கள், மீட்பின் மக்கள் என்று மார்தட்டி, முயற்சி எடுக்காது தட்டிக் கழித்தார்களென தி.ப.13:50-ல் வாசித்தோம். எனவே தான் பவுல் நீங்கள் இறைவார்த்தையை உதரித்தள்ளி நிலை வாழ்விற்கு தகுதியற்றவ்ரகளென உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக்கொண்டீர்களென தி.ப.13:48-ல் கூறுவதைக்கேட்டோம்.

ஆம் நாம் நல்லாயனுக்கு சொந்தமானவர்கள் நம்மை அவர் பாதுகாக்கிறார். அவரோடு நாம் இருக்கும் போது எத்தகைய துன்பத்தையும் மன உறுதியோடு தாங்கிக் கொள்ள முடியும். பல்வேறு துன்பங்களுக்கு ஆளான போதும் அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தாக இன்றைய முதல் வாசகத்தில்கேட்டோம்.

பவுலும் பன்முறை கொடுமைக்கு உள்ளானார். சாட்டையடி, கல்லடி தடியடிபட்டார். ஆழ்கடலில் கப்பல் சிதைவில் சிக்கினார் என (2 கொரி. 11:23-28) லும் சிக்கலில் துன்பத்தில் துவன்டாலும் தான் மகிழ்ச்சியில் திளைத்ததாக 2 கொரி. 6:10 லும் பேசுகிறார். காரணம் தன்னை இறைவன் பாதுகாத்து பராமரித்து தன்னுடன் உடனிருந்து காத்தார் என்கிறார்.

எவ்வளவு துன்பச் சோதனைகளும் பாடுகளும் வந்தாலும் அவை எதுவும் இப்படிப்பட்டவர்களை அசைக்காது. காரணம் அவர்கள் நல்லாயனின் குரலுக்கு நம்பிக்கையோடு செவிசாய்ப்பவர்கள் எதற்குமே அஞ்சமாட்டார்கள்.

பேராயர் புல்டன்ஷீன் ஒருமுறை இதய அறுவை சிகிச்சைக்காக மருத்துமனையில் அனுமதிக்கபட்டார். அவரை நிரூபர் சந்தித்து கேள்வி கேட்டார். நீங்கள் இருதய அறுவைசிகிச்சைக்கு சென்ற பொழுது பயம் இருந்ததா? சிகிச்சைக்கு முன், பின் உங்கள் மனநிலை எப்படி இருந்தது எனக் கேட்டார். அதற்குப் பேராயர் புல்டன்ஷீன் நான் ஏன் பயப்பட வேண்டும். நான் வாழ்தேன் என்றால் கிறிஸ்து என்னுடன் இருப்பார். ஒருவேளை இறந்தால் நான் கிறிஸ்துவோடு இருப்பேன் என பதிலளித்தார்.

ஆம் இன்றைய இறைவார்த்தை உள்வாங்கி இயேசுவை நல்லாயனாக ஏற்றுக்கொண்ட நாமும் அவரோடு சாவோம். ஏனென்றால் அவர் ஆடுகளுக்காக தன் உயிரைத் தரவந்தவர். ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு இறைத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற விண்ணைத் துறந்து மண்ணுக்கு இறங்கி வந்தவர். ஆமென்.



# பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு

தி.ப.13:14,43-52, தி.வெ.7:9,14b-17, யோவா. 10:24-30

**08-05-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

ஆண்டவர் என் ஆயர், எனக்கேதும் குறையில்லை என்ற திடமான நம்பிக்கையுடன் வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய வாசகங்கள் தேவ அழைத்தல் நாளாக இந்த ஞாயிறை மாற்றியுள்ளன. எனவே இன்றைய நாளை நல்லாயன் ஞாயிறாகவும், தேவ அழைத்தல் நாளாகவும் சிறப்பித்து மகிழ தாய் திருச்சபை நம்மை அழைக்கிறது.

இன்றைய நற்செய்தி வாசகம் ஆண்டவர் இயேசுவை நல்ல ஆயனாகவும், மாபெரும் தலைவ னாகவும், இயேசுவின் குரலுக்குச் செவிசாய்த்து அவரைப் பின் செல்பவர் களை ஆடுகளாகவும் சித்தரிக்கிறது.

இயேசு தன்னை ஆயன் என்று வெறுமனே அடையாளப்படுத்திக் கொள்ளாமல் நல்லாயன் என்ற அடைமொழியோடு தான் யார் என்பதை வெளிப்படுத்துகிறார்.

கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவை ஆயனுக்கும் ஆடுகளுக்கும் உள்ள உறவாக ஒப்பிடுகிறது இன்றைய வழிபாடு. நல்லாயனின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வதும், அவருடைய குரலுக்குச் செவி சாய்ப்பதும், அவரைப் பின்தொடர்ந்து செல்வதுமான இம்மூன்று காரியங்களையும் கடைப்பிடித்து வாழ்ந்தால் அவருடைய மந்தையாக மாறுவோம் என்பது உறுதி.

நாம் நமது நல்லாயன் இயேசுவின் குரலைக் கேட்கிறோமா? அவரது குரலைக் கேட்டு அவரை நாடி வருகிறோமா? என்பது குறித்து இன்றைய திருவழிபாட்டின் வழியாக சிந்திப்போம்.

கடவுளின் அழைப்பை உணர்ந்தவர் களாய் ஆண்டவரே என் ஆயர், எனக் கேதும் குறையில்லை என்ற சிந்தனை யோடும், அவர் நம்மை வழி நடத்துவார் என்ற நம்பிக்கையோடும் கிறிஸ்து இயேசுவில் இணைந்து வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற் போம்.

## முதல் வாசக முன்னுரை

புற இனத்தாருக்கு ஒளியாக கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பவுலும் பர்னபாவும் தங்களது தூதுரைப் பணியை முதன் முதலாக யூதர் களின் செபக்கூடத்தில் தொடங்கியதையும், அவர்களது வார்த்தையைக் கேட்க நகரமே அங்கு ஆர்வமுடன் கூடியதையும், பவுலடியாரின் பெருமையும், புகழும் யூதர்களுக்கு வேம்பாக கசந்ததையும் இன்றைய முதல் வாசகம் விளக்குகிறது. இறைவனது அழைப்பு புறஇனத்து மக்களுக்கு வழங்கப்படுகிறது என்ற உலகின் கடை எல்லைவரை சான்று பகரும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நமக்காக இறந்து உயிர் பெற்றெழுந்த ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து அரியணையில் வீற்றிருக்கிறார். அதே நேரத்தில் நமக்கு ஆயராக இருந்து நம்மை வழி நடத்தவும் செய்கிறார் என்ற காட்சியின் வர்ணனையே இன்றைய இரண்டாம் வாசகம். இறை வார்த்தைகளும் வழிபாடும் இரண்டறக் கலக்கும்போது கடவுள் நம்மில் குடிகொண்டு நம்மைக் காப்பார். நம் கண்ணீரைத் துடைப்பார் என்ற நம்பிக்கை தரும் வார்த்தை களை சுமந்து வரும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவுடனும், முன்மதியுடனும் வழி நடத்துவார்கள் என்றுரைத்த அன்பு இறைவா, உலகம் முழுதும் மீட்படைய உம்மால் ஒளியாகத் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் மக்களை வாழ்வு தரும் நீரூற்றுகளுக்கு வழி நடத்திச் செல்லக்கூடிய ஆற்றலையும், ஞானத்தையும் அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) எங்கள் அனைவரையும் தம் உள்ளங்கையில் பொறித்து வைத்திருப்பவரான அன்பு இறைவா, நாங்கள் எங்கள் குடும்பத்தில் நல்ல தலைவர்களாகவும், சமுதாயத்தில் நல்ல வழிகாட்டிகளாகவும், தடுமாறுகிறவர்களுக்குப் புதிய பாதையாகவும், வாழ்வை இழந்தவர்களுக்கு வாழ்வாகவும், இருளில் தடுமாறுபவர்களுக்கு ஒளியாகவும், மனித சமுதாயத்திற்கு சாரமுள்ள உப்பாகவும் வாழ, உம் திருமகனும் எம் ஆயனுமாகிய இயேசுவின் பாதையில் தடம் மாறாது பயணம் செய்ய தேவையான அருள் வரங்களை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) பசும்புல் மேய்ச்சலுக்கும், தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்லும் நல்லாயனாம் அன்பு இறைவா, எம்மை ஆளும் அரசியல் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் உம் திருக்கரங்களில் ஒப்படைக்கிறோம். அவர்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாய், இயேசு கொண்டிருந்த தலைமைப் பண்புகளைக் கொண்டவர்களாய், ஆடுகளில் பேதம் பார்க்காதவர்களாய், சிதறிப்போன மந்தையை சேர்ப்பவராய், அன்பில் நிலைத்திருப்பவராய், தியாக உள்ளம் கொண்டவராய் அவர்கள் ஒவ்வொருவரும் விளங்கிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) தாயின் கருவில் உருவாகும் முன்பே எம்மை அறிந்திருப்பவரும், நாங்கள் பிறப்பதற்கு முன்பே எம்மை திருநிலைப்படுத்தியவரும், அறுவடையின் உரிமையாளருமான அன்பு இறைவா, அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு என்ற உமது அழைப்பினை இன்றைய இளைஞர்களும், இளம்பெண்களும் விசுவாசம் மற்றும் அர்ப்பண உணர்வுடன் ஏற்று, உமது அருட்பணியை தொடர்ந்து ஆற்றவும், உமது மறை உடலாகிய திருச்சபைக்கு அணிகலனாகத் திகழவும், உலகின் உப்பாகவும், ஒளியாகவும், வாழ்வாகவும், வழியாகவும் அவர்கள் விளங்கிடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளையின்
## இரட்சணிய மனோகரம்



**கள்ள னுக்கருள் காட்டிய**
**வள்ள லேபர மண்டலத்து**
**உள்ளு ளேஎனை யுள்ளியாட்**
**கொள்ளு வாய்கதி கூட்டுவாய்**

இயேசுவே! நீ சிலுவையில் அறையப்பட்டபோது உம்மை வேண்டி நின்ற கள்வனுக்கு அந்நிலையிலும் அருள்தந்தவரே! நீவிர் உம் மனத்தில் என்னையும் நினைத்து உமக்கு அடிப்பணி செய்யும் அடிமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறிதும் குற்றமில்லாத நன்னிலையை நான் அடைய அருள்புரிய வேண்டும்.

# வத்திக்கான் செய்திகள்



**உலகம் அணு ஆயுதங்களற்ற இடமாக மாறவேண்டும்**

உலகில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது, மற்றும், அவற்றைச் சேமித்து வைத்திருப்பது அறிவுக்கு எட்டாதது – திருத்தந்தை பிரான்சிஸ்

**மனஉறுதியோடு கிறிஸ்தவ நம்பிக்கையை வாழ்தல்**

வாழ்வின் முதுமைப் பருவத்தில், வயதுமுதிர்ந்தோர் நம்பிக்கை வாழ்வுக்குச் சான்றுபகர்வதன் வழியாக, இளையோர் மனஉறுதி மற்றும், துணிச்சலோடு வாழ உதவ முடியும் – திருத்தந்தை பிரான்சிஸ்

**திருஅவையின் கலாச்சாரச் சொத்துக்கள் நம்பிக்கைக்கு பங்களிப்பு**

தனிவரம் மற்றும், படைப்பாற்றல்: துறவு சபைகளின் கலாச்சாரச் சொத்துக்களை மேலாண்மை செய்தல் என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் ஒன்று உரோம் நகரில் நடைபெற்று வருகிறது

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு

### 08.05.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : திப. 13:14, 43 - 52
இரண்டாம் வாசகம் : தி.வெ. 7:9, 14ஆ-17
நற்செய்தி வாசகம் : யோவா. 10: 27-30

### 09.05.2022 – திங்கள்கிழமை

முதல் வாசகம் : திப. 11:1-18
நற்செய்தி வாசகம் : யோவா 10: 1-10

### 10.05.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : திப 111 : 19-26
நற்செய்தி வாசகம் : யோவா. 10: 22-30

### 11.05.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : திப. 12:24-13:5
நற்செய்தி வாசகம் : யோவா. 12: 44-50

### 12.05.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : திப. 13 : 13-25
நற்செய்தி வாசகம் : யோவா. 13:16-20

### 13.05.2022 – வெள்ளிக்கிழமை

முதல் வாசகம் : திப. 13:26-33
நற்செய்தி வாசகம் : யோவா. 14:1-6

### 14.05.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : திப. 1 : 15-17, 20-26
நற்செய்தி வாசகம் : யோவா. 15:9-17

The steadfast
love
of the LORD
never ceases;
his mercies
never come
to an end;
they are new
every morning;
great is your
faithfulness.




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.**

அதிகாரம் 14
ஒழுக்கமுடைமை
குறள் - 132

**பொருள் :**

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

ஒழுக்கம் என்பது ஒழுகுதல்; மற்றவர்களுடன் மோதாமல் மற்றவர்களுக்கு தீங்கு நேராமல் நடப்பதும், வாழ்வதும் ஒழுக்கமுடைமை ஆகும். மனிதனின் சமூக வாழ்வுக்கு தீங்கு செய்வன எல்லாம் தீய பழக்கம். ஒழுக்கக்கேடு தவிர்க்கத் தக்கது. மனிதனை சமூக வாழ்வில் நிலைபெறச் செய்யும் எல்லாமே ஒழுக்கமுடைமை. ஒழுக்கம் மனிதனை உயர்த்துவது.

நல்ல பழக்கங்கள் வேறு; தீய பழக்கங்களை ஒழுக்கத்திற்கும் அடக்கலாம். ஆனால் ஒழுக்கத்திற்குள் தீய பழக்கம் வராது.

ஒரு மனிதன் வாழ்க்கையில் ஒழுக்கம் அவனது உயர்வுக்கு காரணமாக இருக்கிறது. ஆதலால் தான் வாழ்வில் ஒழுக்கம் உயிரை விட மேலானதாக பார்க்கப்படுகிறது.

ஒழுக்கம் தவறியவர்கள் வாழ்வில் உயர முடியாது. மாறாக துன்பங்களை சந்திக்க நேரிடும்

இதனை கல்வியே நமக்கு போதிக்கின்றது .

அதாவது ஒழுக்கத்தை தராத கல்வியும், விளைச்சலை தராத வயலும் வீணானது என்று கூறுவார்கள். கல்வியின் பயன் அறிவு ; அறிவின் பயன் ஒழுக்கம்; இவ்வாறு மனிதர்கள், வாழ்வில் ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

குடும்பமே மனிதகுலத்தின் அடித்தளம்.

அடித்தளம் எப்படியோ அப்படியே கட்டடமும்..

குடும்பம் எப்படியோ அப்படியே உலகமும் இருக்கும். எனவே உலகம் உய்ய வேண்டுமானால் ஒழுக்கமான முறையில் ஒவ்வொருவரும் வளர வேண்டும். நல்ல குடும்பங்களை உருவாக்க வேண்டும். குடும்பம் சீர்குலைந்தால் வையகமே வீணாகும்.

நல்ல மக்களை உருவாக்கி உலகத்தை வாழ வைப்பது பெற்றோர்களின் தலையாய கடனாகும். ஹிட்லர்,முசோலினி ஸ்டாலினால் உலகம் அழிந்தது.

ஆபிரகாம் லிங்கன் , மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலாவால் உலகம் உயர்ந்தது. ஒரு ஜான் பாலையும் , ஒரு அன்னை திரேசாவையும் உருவாக்க பெற்றோர்களால் தான் முடியும். உலகை உருவாக்கிய இறைவன் ஒவ்வொருவரையும் ஒழுக்கமான குடும்பத்தை அதாவது புனிதமான குடும்பத்தை உருவாக்க ஒவ்வொருவரையும் தேர்ந்து கொண்டார்.

பெற்றோர்கள் தங்கள் கடமையில் தவறினால்

ஒரு பின்லேடனும் சதாம் உசேனும் உருவெடுப்பார்கள். உலகம் உயர்வதும் ,அழிவதும் நம் ஒவ்வொருவரின் கையில்தான் இருக்கிறது.

எனவே கடவுளைப் போல ஒழுங்குகள் என்று

(எபேசியர் 5:1)

நடத்தையில் பரிசுத்தராய் இருங்கள் (1 பேதுரு 1:15)

அனைவரும் ஒருமனப்பட்டு இருங்கள் (1பேதுரு 3:8)

சினம் சீற்றம், தீய மனதை நீக்குங்கள் (கொலேசியர் 3:8.)

உங்கள் பேச்சு எப்பொழுதும் இனிதாய் இருக்கட்டும் (கொலேசியர் 4:6)

கெட்ட நடத்தையை விலக்குங்கள். (கலாத்தியர் 5: 19)

நல்வாழ்வை நாடுங்கள் (திருப்பாடல் 34 :14)

வேலையாளுக்கு கூலியை மறுக்காதீர்கள் (லூக் 10:7)

பெரியோர்களுக்கு தலை வணங்குங்கள் (சீராக 4:7)

நெறிகெட்ட மாதரோடு தொடர்பு வைக்காதீர் (சீராக் 9:3)

குடிவெறியில் காலம் கழிக்காதே (நீதிமொழிகள் 23:21)

மேலும் இன்னும் பல வசனங்களைக் கொண்டு நம் வாழ்வில் எவ்வாறு வாழவேண்டும் ஒழுக்க நெறிகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதை ஆண்டவர் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார்.

நாமும் ஆண்டவரின் வார்த்தைகளை படித்து இந்த உலகில் ஒழுக்க சீலர்களாக வாழ்வோம். என முடிவெடுப்போம்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...